## இறந்தவர்களை கணக்கெடுத்தல்: இலங்கை

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**தகவலை சேகரிக்கும் போது படிவங்களை கையால் நிரப்ப வேண்டுமா அல்லது ரைப் செய்ய வேண்டுமா?**
அது ஒவ்வொரு குழுவையும் பொறுத்தது எதை அவர்களுக்கு செய்வதற்கு சிறந்ததாக இருக்கின்றதோ அதன்படி செய்யலாம். சில சமயங்களில் ஆட்களை செவ்வி காணும்போதே கையால் எழுதுவது சுலபமாக இருக்கும் ஏனெனில் கதைத்துக் கொண்டிருக்கும் போது தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி படிவத்தை நிரப்புவது கடினமானதாக இருக்கும். ஆயினும் உங்களிடமிருந்து தமிழிலும் ஆங்கிலத்திலும் தகவல் அட்டவணையில் ( Spread Sheet) ரைப் செய்யப்பட்ட தகவலே எங்களுக்கு தேவை.

**இந்த தகவலை ஆங்கிலத்திலா அல்லது தமிழிலா சேகரிப்பது நல்லது?**
தமிழில் விரும்பதக்கது. ஆனால் இரண்டு மொழிகளிலும் இருந்தால் உதவியானதாக இருக்கும்.

**நாங்கள் காணாமற்போனவர்களையும் இறந்தவர்களாக உள்ளடக்குகின்றோமா?**
எல்லோரையும் உள்ளடக்கவும் , ஆனால் காணாமற்போனவர்களையும் இறந்ததாக அறியப்பட்டவர்களையும் வேறுபடுத்திக்காட்டுவது மிகமுக்கியமானதாகும்.

**நான் ஒருவரை இறந்ததாக பதிவு செய்யும் போது அதே நபரை இன்னுமொருவரும் பதிவு செய்வதால் ஏதாவது பிரச்சினையா?** இல்லை, அது எங்களுக்கு மிகவும் பிரயோசனமானதாக இருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பதிவு செய்யப்படுவதையிட்டு கவலைப்பட வேண்டாம்.

**இறுதிப் பெயர்ப் பட்டியலின் ஒரு பிரதி எங்களுக்கு கிடைக்குமா?**
நீங்கள் இதற்குப் பங்களிப்புச் செய்தால் இறந்தவர்களின் பெயர்களை ஒன்று சேர்த்த ஒரு பட்டியலின் பிரதியினை உங்களுக்கு தருவோம். அதில் தகவல் மூலங்களை அடையாளங்காணாத முடியாதபடி இருக்கும் இதன் மூலம் தகவல்களை சேகரித்தவர்கள் பற்றிய இரகசியத் தன்மையினை நாங்கள் பாதுகாக்க முடியும்.

**ஏன் நீங்கள் போர் வீரர்களை பொதுமக்களிடத்தில் இருந்து வேறுபடுத்திக் காட்டவில்லை?**
ஏனெனில் இந்தச் சந்தர்ப்பத்தில் ,யார் ஆயுதம் தாங்கியிருந்தார்கள், யார் தீவிரமாகச் சண்டை பிடித்துக் கொண்டிருந்தார்கள், யார் பொதுமக்கள் அல்லது வேறு நபர்கள் என்பதை உறுதிப்படுத்துவது மிகவும் சிரமமானதாகும். வயதின் அடிப்படையில் தகவல்களை வேறுபிரிக்ககூடிய வழிகள் உள்ளன. – குழந்தைகள் மற்றும் வயோதிபர்கள் போர் வீரர்களாக நிச்சயம் இருக்கமாட்டார்கள்.

**யாராவது பட்டினியால் அல்லது நோயினால் இறந்திருந்தால் அவர்களை எவ்வாறு பதிவு செய்வது?** பொதுவில் போருடன் தொடர்புபட்டதாக இறந்தவரிகளை விட வன்முறையினால் இறந்தவகளின் விபரங்களைச் சேகரிப்பதிலே நாங்கள் ஆர்வமாக இருக்கின்றோம். பட்டினியால் அல்லது நோயினால் இறந்தவர்களை நீங்கள் உள்ளடக்க விரும்பினால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் வன்முறைச் சம்பவங்களால் இறந்தவர்களுக்கு வேறாக அவர்கள் இறந்தமைக்கான காரணங்களைக் தெளிவாக குறிப்பிடுவது மிகவும் முக்கியமாகும்.

**எவராவது மெனிக் பாம் முகாமில் அல்லது போருக்கும் பின்னரான தடுப்புக்காவலின் போது இறந்த அல்லது காணாமற்போன ஒருவரை எவ்வாறு பதிவு செய்வது?** இந்தச் சந்தர்ப்பங்களில் இவற்றை திகதியிடுவது எங்களுக்கு முக்கியமாகும் அல்லது ஆகக்குறைந்தது மே 2009 இற்கு பின்னரானவை என அடையாளங்காண்பது முக்கியமானதாகும். ஓவ்வொருவரினதும் இறந்த அல்லது காணாமற்போன திகதி மிகவும் முக்கியமானதாகும்.

**1983 ஆம் ஆண்டிலிருந்து இறந்த அனைவரினதும் தகவல்களையும் ஏன் நீங்கள் சேகரிக்கின்றீர்கள்?** ஏனெனில் நீண்ட காலத்திற்கு பின்னால் இருந்து மதிப்பீடு செய்வது கோட்பாட்டு ரீதியில் சாத்தியதானகும். ஆயினும் அது தரவுகளின் தன்மையில் தங்கியுள்ளது. நாங்கள் வெவ்வேறு காலப்பகுதிகளுக்கு மதிப்பீடு செய்வோம் அத்துடன் எவ்வளவு காலத்திற்கு பின்னதான தகவல்களை பெற்றுக் கொள்கின்றோமோ அவ்வளவு காலப்பகுதிக்கு பின்னரானதான மதிப்பீட்டை மேற்கொள்ளலாம்.

**ஏற்கனவே உள்ள ஒரு பட்டியலை என்ன வடிவில் அதனைப் பகிர்ந்து கொள்வது நல்லதாக இருக்கும்? அது தகவல் அட்டவணையாக இல்லாவிட்டால் என்ன?** இது தொடர்பில் பயன்படுத்துவதற்கு தகவல் அட்டவணையொன்று உள்ளது. உங்களுடைய தரவு அந்த வடிவில் இல்லாவிட்டால் உங்களிடம் உள்ளவற்றை அப்படியே எங்களிடம் அனுப்புங்கள் நாங்கள் அதற்கு தேவையானவற்றைச் செய்வோம்.

**இறந்தவர்களின் படங்கள் உங்களுக்கு தேவையா?**
தயவுசெய்து ஆம், இறந்த உடலங்களின் படங்கள் தேவையில்லை ஆனால் அவர்கள் உயிருடன் இருக்கும் போது எடுக்கப்பட்ட படங்கள் தேவை ஏனெனில் அவர்கள் உயிருடன் இருந்ததினை உறுதிப்படுத்துவதற்கு அவை உதவும் அத்துடன் ஒரே மாதிரியான பெயர்களைக் கொண்டவர்களை வெவ்வேறு படங்களில் இருந்து வித்தியாசம் கண்டு கொள்ளவும் அவை உதவும்.

**ஏன் நீங்கள் இறந்த சிங்களவர்களின் விபரங்களைச் சேகரிக்கவில்லை?**
பலியான அனைவரையும் ஆவணப்படுத்துவது முக்கியமானதாகும், தமிழர்களின் இறப்பு விபரங்களுடன் நாங்கள் சிங்களவர்களின் இறப்பு விபரங்களையும் வரவேற்கின்றோம். நாங்கள் உதாரணமாக ஜே வி பி காலத்து இறப்புக்கள் உட்பட அனைத்தையும் எமது செயல்முறைக்குப் பயன்படுத்துவோம்.

**இதற்குரிய கால எல்லை என்ன?**
30 மாரச் 2019. இந்த திகதியில் நாங்கள் தகவல்களை செயல்முறைக்கு உள்ளாக்கினால் போர் முடிவுற்று பத்து ஆண்டுகள் நிறைவுக்கு அண்மையாக மதிப்பீட்டை வெளியிடமுடியும்.